<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ. எண். 339/2022

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | மார்க்கபந்து |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | சீனிவாசன் |
| வயது | .. | 62 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செய்யாறு |
| வட்டம் | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் நாள் வியாழக்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

அ.வ.எண். 179/2011 மற்றும் இந்த வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ஆவணத்தில் ச.எண். 473/பி1பி-ல் மின்சார எண் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கிலும் இந்த வழக்கிலும் வழக்கு சொத்தில் வீடு இருப்பதாக சொல்லப்பட்டதா என்றால் சொல்லவில்லை ஆனால் அந்த இடத்தில் சிமெண்ட் ஷீட் ஓட்டுவீடு உள்ளது. அந்த வீட்டை இடித்துவிட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆனால் இந்த வழக்கில் மேற்படி வீடு இடிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. மாங்கால் கூட்ரோட்டில் எனக்கு இடம் எடுக்கப்பட்டதற்கு என்று சொல்லப்பட்டுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் இந்ந நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் நான் சி.சி. வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேலும் இந்த வழக்கில் 9(3) அறிவிப்பு தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதேபோல பிரதிவாதி இடத்தில் ரோடு போடுவதற்காக இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் அது தெரியும். அது வேறு ஒரு கொடநகர் கிராம சர்வே எண் 473/3பி1 தண்டரை கால்வாய் இடம் ஆகும். நான் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 96/2022ல் இதே சர்வே நெம்பருக்கு வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் சரிதான்.

அந்த வழக்கில் விசாரணை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டு மேல்முறையீடு இந்த நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி மேல்முறையீட்டு எண். 69/2023 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இதேமாதிரி தான் அந்த பகுதியில் வசிக்கும் நபரின் மீது வழக்கு தாக்கல் செய்வது வழக்கம் என்றும் அவ்வாறு தான் இந்த வழக்கும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு சொத்து சம்மந்தமாக உரிமை ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாமல் தாக்கல் செய்த இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. ச.எண். 473பி/1ஏ1ஏ மானாவரி புஞ்சை. அரசுக்கு சொந்தமான நிலம். ச.எண். 473பி/1பி தண்டரை கால்வாய்கரை சொந்தமான இடம். இந்த இடங்கள் அரசு பராமரிப்பில் இருந்து வருகிறது என்றால் சரிதான். ஆனால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை ஆனால் அவர்கள் தான் இடத்தை காட்டினார்கள். வழக்கு சொத்துக்கள் பிரதிவாதி உரிமை ஆவணம் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும் மேலும் வருவாய்துறையில் பட்டா மாற்றம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்றும் நான் பொய் வழக்கு போட்டதால் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. மேலும் பிரதிவாதி வாங்கியதாக சொல்லும் கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண் வருவாய் துறை ஆவணத்திலேயே இல்லை.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**